நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



மெய்யப்பர் சேவுகனார் மேலான திருப்பணியால்
ஐயாற்றில் அருள்பொழியும் அறம்வளர்த்த நாயகியே!
வெய்யவினை நீருக மேனியிலே நீருடிக்
கையெடுத்துக் கும்பிட்டோம் கருணைமழை பொழிவாயே

ஆகஸ்டு 1990

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9

ஒலி 7

பிரமோதூத

ஆடி

ஆகஸ்ட்டு

1990

ஐவர்க்கு ஒருசெய் விளைந்து இடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவார்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல் விட்டாரே

— திருமூலர் திருமந்திரம்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25. வடக்குச் சித்திரை வீதி.
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

ஆண்டுச் சந்தா ரூ. 24-00 டெபாசிட் சந்தா ரூ. 200-00

நாகப்பன் - கீதா திருமண வாழ்த்தரங்கில்....

செட்டியார் எனது நீண்ட நாளைய நண்பர். இனிய நண்பர். அவருடைய புதல்வனின் திருமணத்தில் கலந்து கொள்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன். மணமக்கள் எல்லா நலன்களையும் வாழ்வில் முழுமையாகப் பெற இறையருளை வேண்டுகிறேன்.

— ஜி. கே. மூப்பனார்

சினாதானாவின் குடும்பம் சிறந்த குடும்பம். மூன்று பிள்ளைகளும் தந்தையின் புகழை நிலைநாட்டி வருகிறார்கள். வி. என். சிடி. தக்காராக வந்தபின் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் திருக்கல்யாண சன்னதியை ஏற்படுத்தினார். அவருடைய புதல்வனின் திருமணம் பாரோர் பாராட்டும்படி நடந்து கொண்டிருக்கிறது. மணமக்கள் பல்லாண்டுகள் வாழ வாழ்த்துகிறேன்.

— கே. ராஜாராம்

(முன்னாள் அமைச்சர்)

பாசத்திற்குரிய சகோதரர் வி. என். சிடி. யின் புதல்வரது திருமணம் மிக அருமையாக உற்றாரும் ஊராரும் புடைசூழ நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வி. என். சிடி. யுடன் சில ஆண்டுகளே எனக்குப் பழக்கம். ஆனால் அவர் நெடுநாள் பழகிய நண்பராகப் பாசத்துடன் திகழ்கிறார். அவர் பழகுவதற்குத் துளசியாக இருப்பார். பொதுத் தொண்டில் ஈடுபட்டிருப்பவர்களை அரவணைத்துச் செல்வதில் வல்லவர்.

— கே. ஏ. கிருஷ்ணசாமி

(முன்னாள் அமைச்சர்)

இரண்டு திருமணங்கள் புகழ் மிக்கவை, ஒன்று சொக்கேசர்-மீனாட்சி திருமணம், இன்னொன்று நாகப்பன் - கீதா திருமணம். இரண்டும் ஒரே நாளில் நடைபெற்றுள்ளது. இன்று எல்லாச் சாலைகளும் சோழபுரத்தை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. அன்பிற்கும் பாசத்திற்குமுரிய நண்பர் வி. என். சிடி. அவர்களின் வாழ்க்கை மற்றவர்களுக்கு முள்வேலியாய் இருந்ததில்லை. இத்திருமணத்தில் கலந்து கொண்டு பேசுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். மணமக்கள் சிறந்த வாழ்க்கை வாழப் பிரார்த்திக்கிறேன்.

— கே. காளிமுத்து

(முன்னாள் அமைச்சர்)

வி. என். சிடி.க்கு நண்பர்கள் மிகப் பெரிய சொத்து. மீனாட்சி திருக்கல்யாணத்தன்று இத்திருமணமும் நடைபெற்றிருப்பது ஒரு சிறப்பு. தமிழ்த் திருமணம் செய்து கொண்டுள்ள நாகப்பனும் கீதாவும் மனமொத்து பல்லாண்டுகள் வாழ அன்னை மீனாட்சியின் அருளை வேண்டுகிறேன்.

— பி. எஸ். ராம சுப்பிரமணிய ராஜா

இத்திருமணத்தில் கலந்து கொண்டு மனப்பூர்வமாக வாழ்த்த வேண்டுமென்று வந்தேன். 27 வயதில் நான் தெரிந்து கொண்டதை


13 வயதில் விரிவுரை எழுதும் அளவுக்கு இப்போதைய பிள்ளைகளுக்கு ஞானம் இருக்கிறது. இவர்கள் ஏற்கனவே காதல் பண்ணியவர்கள். 'லொகேஷன்ஸ்' தெரியும். மாட்டர்ஸ் எல்லாம் தெரியும். நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. ஒரு குடும்பம் செழிப்போடு வாழ மீனாட்சி அம்மனின் அருள் வேண்டும். மீனாட்சி அம்மையே போற்றி... போற்றி... பாராளும் தாயே போற்றி போற்றி...

— நடிகர் நாகேஷ்.

ஜோர்ஃபுல்லா லவ் பண்ணுறது எப்படின்னு நாகப்பனுக்குத் தெரிஞ்சிருக்கு. எனவே அவரை வைத்து ஒரு இன்ஸ்டிடியூட் தொடங்கலாம். மணமக்களே உங்களுக்குப் பெரியவர்களின் அன்பும் ஆதரவும் என்றும் இருக்கிறது. நீங்கள் சிறந்த வாழ்வை அமைத்துக் கொண்டு நாட்டுக்கு முடிந்த நல்ல தொண்டுகளைச் செய்யவேண்டும் என விரும்புகிறேன்.

— நடிகர் ஜெய்சங்கர்

(நமது இதழின் ஆசிரியர் வி. என். சிடி. அவர்களின் புதல்வன் செல்வன் நாகப்பன் - செல்வி கீதாவின் திருமண வாழ்த்தரங்கில் பேசியவை)



குளிபிறை பெரி. ராம. யே. பாலசுப்பிரமணியன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி நாகம்மை என்ற ஜெயந்திக்கும் பனையப்பட்டி சி. மு. மு. பழ. முத்தையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் மீனாட்சி சுந்தரம் B. Com. க்கும் 7-6-90 அன்று குளிபிறையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிமலை நகரத்தார் திருமண மண்டபத்தில் 15-6-90 அன்று திருமண வரவேற்பு நடைபெற்றது.

காவல் துறை ஆணையாளருக்குப் பாராட்டு விழா

மதுரை மக்கள் மன்றத்தின் சார்பாக மதுரைப் பெருநகர் காவல்துறை முதல் ஆணையாளரும் பாரதக் குடியரசுத் தலைவரின் பரிசு பெற்றவருமான திரு. கோ. செல்வராஜ் I. P. S. அவர்களுக்கு மதுரை ராஜா முத்தையா மன்றத்தில் 8-7-90 ஞாயிறு காலை பாராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு மதுரை வருமான வரி ஆணையாளர் திரு. எஸ். பாபு I. R. S. அவர்கள் தலைமை ஏற்றுப் பேசினார்கள்.

நமது இதழின் ஆசிரியரும் விழாக் குழுத் தலைவருமான திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

இவ்விழாவில் திரு. கோ. செல்வராஜ் அவர்களுக்கு திரு முருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நினைவுப் பரிசு வழங்கி ஆசியுரை வழங்கினார்கள்.

காவல் துறை ஆணையாளர் திரு. கோ. செல்வராஜ் அவர்களின் சேவையைப் பாராட்டி 'அறமனச் செம்மல்' திரு. சேவு. அண. அண்ணாமலைச் செட்டியார் பொறியாளர் திரு. டி. எம். ஜம்புலிங்கம் 'சிவனருட் செல்வர்' திரு. கருமுத்து எஸ். சொக்கலிங்கம் செட்டியார், கருமுத்து திரு. தி கண்ணன், வழக்கறிஞர் திரு. பி. எம். கதிரேசன், பேராசிரியர்கள் திரு. சாலமன் பாப்பையா, திரு. சொ. சொ. மீ சுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். தாலாட்டுக் கவிஞர் திரு. T. குமரப்பன் கவிதையில் வாழ்த்தினர்.

விழாக்குழு சார்பாக திரு. செல்வராஜ் அவர்களுக்கு கருமுத்து திரு தி. கண்ணன் பொன்னாடை அணிவித்தார்.

விழாக்குழு சார்பாக செயலாளர் திரு. எம். சிஎன். மாணிக்கம் திரு. செல்வராஜ் அவர்களுக்கு வாழ்த்து மடல் வழங்கினார்.

திரு. செல்வராஜ் அவர்கள் ஏற்புரை நல்கிய பின் டாக்டர் திருமதி விஜயலெட்சுமி நவநீத கிருஷ்ணன் குழுவினரின் கிராமியக் கலை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

செயலாளர் திரு. கலைமகள் நடராஜன் செட்டியார் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

இவ்விழா ஏற்பாடுகளை விழாக் குழுத்தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் மற்றும் குழுவினரும் கடந்த ஒரு மாத காலமாகத் திட்டமிட்டு சிறப்பாகச் செய்திருந்தனர்.

ஒருவனுக்கு அழிவில்லாத உயர்ந்த செல்வம் கல்வியாகும். மற்றைய பொன்னும் மணியும் எல்லாம் செல்வம் ஆகாது.

— திருவள்ளுவர்



உ

தீபாவளி கங்கா ஸ்நானம் - காசி யாத்திரை

தீபாவளியன்று காசியில் கங்கா ஸ்நானம் செய்து தங்க அன்னபூரணி, தங்க விசாலாட்சி, மிட்டாய்த் திருவிழா, லட்டுத் தேர் பார்த்தல்.

13—10—90 முதல் 10 நாட்கள் : காசி - சாரநாத் - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) யாத்திரை நபர் 1க்கு ரூ. 1250/-

13—10—90 முதல் 14 நாட்கள் : காசி - சாரநாத் - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) டெல்லி - ஆக்ரா - மதுரா - ஹரித்துவார் - ரிஷிகேஷ் யாத்திரை நபர் 1க்கு ரூ 1850/-

13—10—90 முதல் 20 நாட்கள் : காசி - சாரநாத் - கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) டெல்லி ஆக்ரா - மதுரா - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - பத்ரிநாத் - கேதார்நாத் யாத்திரை நபர் 1க்கு ரூ. 2400/-

மேற்கண்ட கட்டணங்கள் யாவும் ரயில் கட்டணம், ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு, சாப்பாடு அடங்கியவை ஆகும். தேவையான இடங்களுக்கு நபர் 1க்கு ரூ. 500/- வீதம் அட்வான்ஸ் செலுத்தி விரைவில் டிக்கட் பதிவு செய்ய வேண்டுகிறோம்.

ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி

9, வடக்காவணி மூல வீதி, மதுரை-625 001 போன் : 31168

SRI MURUGAN TRAVEL AGENCY MADURAI

இரணிக் கோயிலில் குட நீராட்டு விழா

நகரக் கோயில்களில் ஒன்றான இரணியூர் திருக்கோயிலின் குட நீராட்டு விழா 5-7-90 அன்று சிறப்பாக நடைபெற்றது. விழாவில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இரணியூர்க் கோயிலின் குட நீராட்டு விழா ஏற்கனவே 1944ல் நடைபெற்றது. 46 ஆண்டுகளுக்குப் பிறகு பல இலட்சம ரூபாய் செலவில் கோயில் புதுப்பிக்கப் பெற்று 5-7-90 அன்று குடநீராட்டு நடைபெற்றுள்ளது. யாக சாலைப் பூஜை 2-7-90 திங்கள் காலை தொடங்கி 6 காலம் நடைபெற்றது.

இரணியூர் பத்திரகாளியம்மன் கோயிலுக்கு 4-7-90 அன்றும் ஆட்கொண்டநாதர் - சிவபுரந்தேவி கோயிலுக்கும் நீலமேகப் பெருமாள் கோயிலுக்கும் 5-7-90 அன்றும் குடநீராட்டு விழாக்கள் சிறப்பாக நடைபெற்றன.

திருப்பணிக் குழுவின் தலைவர் ஆற்காடு நூற்பாலையின் நிர்வாக இயக்குநர் பனையப்பட்டி சுப. அ. நடராசன் செட்டியார் அவர்கள் தலைமையில் குழு உறுப்பினர்கள் தேவகோட்டை திரு. அ. ராம அ லெ அ மூவி முத்துவீரப்பசெட்டியார் கொத்தமங்கலம் திரு சி. வெ. சி. சின்னக்கருப்பன் செட்டியார் பள்ளத்தூர் திரு பத்மநாபன் செட்டியார் பனையப்பட்டி திரு. நடராஜ் அண்ணாமலை ஆகியோரும் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவர் திருக்கோயிலின் முன்னாள் தக்கார் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. அரு. லெட்சுமணன் மத்திய அரசின் செய்தித் துறை அதிகாரி திரு. சொக்கு சுப்பிரமணியன் உட்பட அரசு அதிகாரிகளும் முக்கியஸ்தர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

குடநீராட்டை முன்னிட்டு பள்ளத்தூர் திரு ஏஎல். தேனப்பனின் ஏற்பாட்டில் மூன்று நாட்களும் பட்டி மண்டபம், இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 5-7-90 இரவு தெய்வங்களின் திருவுலாக் காட்சி நடைபெற்றது.

அரியக்குடியில் பட்டி மன்றம்

காரைக்குடி அருகில் உள்ள அரியக்குடி திருவேங்கடமுடையான் கோவில் திருவிழாவை முன்னிட்டு 7-6-90 அன்று 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன் தலைமையில் பட்டிமன்றம் நடந்தது. நிர்வாக அதிகாரி திரு. பாண்டியன் வரவேற்க, முதல் தீர்த்தம் ஜெகநாத ஆச்சாரியார் தொடங்கிவைக்க, "செய் நன்றியறிதலில் விஞ்சி நிற்பவன் கர்ணனே" என்று பெரும் புலவர் அப்துல்ரகுமான், செல்வி புனிதவதியும், "கும்பகர்ணனே" என்று செந்தமிழ்ச் செல்வி சு. சரசுவதி, எம் கே. சுப்பிரமணியனும் வாதிட்டனர்.

நடுவர் திரு. அரு. நாகப்பன் "நன்றியில் விஞ்சியவன் கர்ணனே" என்று தீர்ப்பு வழங்கிட திரு. சேதுராமன் நன்றி கூறினர்.

அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் பலவீனர்கள். உழைப்பில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் பலவான்கள்.

— மகாத்மா காந்தி

அனைவருக்கும்

எமது நல் வாழ்த்துக்கள்!

திரு. கோ. செல்வராஜுக்கு அளித்த பாராட்டு விழாவில்...

காவல் துறை ஆணையாளர் திரு. கோ. செல்வராஜ் அவர்கள் நேர்மையானவர்; அன்பானவர்; ஆனால் கடமையில் கண்டிப்பானவர்.

மத வேறுபாடின்றி, கட்சிச் சார்பின்றி இப்பாராட்டு விழா இங்கு நடைபெறுகிறது.

திரு. சாலமன் பாப்பையாவும் நானும் ஒரு ஜாதி. அதாவது இருவரும் ஒரே நிறம்.

வலையபட்டி திரு. ஏஆர். சுப்பிரமணியமும் நமது ஆணையாளர் திரு செல்வராஜும் குடியரசுத் தலைவரின் பரிசு பெற்றவர்கள். அவர் தவிலைத் தட்டி பரிசு பெற்றார்; இவர் லத்தியைத் தட்டிப் பரிசு பெற்றார்.

— வி. என். சிதம்பரம்

திரு. செல்வராஜ் எப்போதும் புன்முறுவலோடு இருப்பார். அவரைப் பார்த்தால் போலீசு அதிகாரியாகத் தெரியாது. அவரால் மதுரை நகருக்குப் பெருமை; அவருக்குப் பாராட்டு விழா நடத்துவதால் நமக்குப் பெருமை.

— எஸ். பாபு (வருமான வரி ஆணையாளர்)

ஆணையாளர் எங்கள் ஊர்க்காரர். எங்கள் குடும்பத்துக்கு வேண்டியவர். நேர்மைக்கு இருப்பிடம்; நட்புக்கு இலக்கணமானவர்.

— டி. எம். ஜம்புலிங்கம்

திரு செல்வராஜ் வரலாற்றிலே ஒரு முத்திரை பதித்திருக்கிறார்கள். வரலாறும் அவர்கள் மீது ஒரு முத்திரை பதித்திருக்கிறது.

— கருமுத்து தி. கண்ணன்

வாக்குக் கற்றவன் வாத்தியார்; போக்குக் கற்றவன் போலீசுக்காரன். உறுதி, எளிமை, திறமை, நட்பு ஆகிய நான்கும் சேர்ந்தவர் செல்வராஜ்

— சொ. சொ. மீ. சுந்தரம்

முனிகளுக்கெல்லாம் ராஜா முனிராஜா; செல்வங்களுக்கெல்லாம் ராஜா செல்வராஜா. தொண்டுக்கு இந்த நாட்டிலே பெருமை அதிகம்.

— திருமுருக கிருபானந்தவாரியார்

பாராட்டு விழா நடத்தி என்னைப் பெருமைப்படுத்தியிருக்கிறீர்கள். அத்தனை குணநலன்களும் எனக்கு இருக்கிறதா? எனக்கே உள்ளுக்குள் சந்தேகம்! பாராட்டு மூலம் என் ஆயுளையே குறைத்திருக்கிறீர்கள். புகழப்படும்போது மௌனியாக இருப்பது நல்லது. நீங்கள் எதிர்பார்த்தபடி அத்தனை குணநலன்களையும் பெற முயற்சிக்கிறேன். இந்தப் பெருமைகள் கிடைக்க நீங்களே காரணம்.

— கோ. செல்வராஜ்

(மதுரைப் பெருநகர் காவல்துறை முதல் ஆணையாளர் திரு. கோ. செல்வராஜ் அவர்களுக்கு மதுரையில் 8—7—90 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் பேசியவை)

பலவான்குடி நகரச் சிவன் கோயில் குட நீராட்டு விழா

பலவான்குடி நகரத்தார் நற்பணி மன்றத்தின் முயற்சியில் பலவான்குடி நகரச் சிவன் கோயிலில் திருப்பணிகள் செய்யப் பெற்று 3-6-90 ஞாயிறன்று காலை 8-30 மணி அளவில் குட நீராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது.

குட நீராட்டு விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், கோவிலூர் ஆதீனம் திரு. காசி விசுவநாத ஞான தேசிக சுவாமிகள் கலாமடம் - பாதரக்குடி ஆதீனம் திரு. இரவீந்திர சுவாமிகள் துலாவூர் ஆதீனம் திரு. ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் தத்புருஷ தேசிகர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சர்வசாதகம் பிள்ளையார் பட்டி டாக்டர் கே. பிச்சைக் குருக்கள் தலைமையில் யாக சாலைப் பூஜைகள், குட நீராட்டு சிறப்பாக நடந்தன.

2-6-90 அன்று முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் நடுவராக இருக்க வழக்காடு மன்றம் நடைபெற்றது.

3-6-90 குடநீராட்டன்று காலையில் முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் ''நீலகண்டரும் நீலகண்டரும்'' என்ற தலைப்பில் பேருரையாற்றினார்கள். மாலையில் புலவர் திரு. வே. வேலப்பன் தலைமையில் கவியரங்கம் நிகழ்ந்தது. இரவு விஜய லெட்சுமி நவநீத கிருஷ்ணன் குழுவினரின் கிராமியக் கலை நிகழ்ச்சியும் இரவு பஞ்சமூர்த்திகள் திருஉலாவும் நடைபெற்றன.

தஞ்சாவூரில் பாராட்டு விழா

தஞ்சாவூர் நகரத்தார் சங்கத்தின் சார்பில் 10-6-90 அன்று தஞ்சையில் சிறப்புக் கூட்டமும் மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதிக்குப் பாராட்டு விழாவும் சிறப்பாக நடைபெற்றது.

சங்கச் செயலாளர் திரு. பிஆர். அருணாசலம் வரவேற்க சங்கத் தலைவர் அரசு திரு. ஏ. சுப்பிரமணியன் தொடக்க உரை நிகழ்த்தினார்.

விழாத் தலைவர் சேவு. அண அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் உரையாற்றுகையில் தஞ்சாவூர் நகரத்தார் சங்கம் பரிந்துரை செய்யும் ஒரு நகரத்தார் மாணவருக்கு தேவகோட்டையில் உள்ள தமது கல்லூரியில் B.Com. பயில ஆண்டுதோறும் இட ஒதுக்கீடு செய்து தருவதாகத் தெரிவித்தார்கள்.

விழாவில் திரு. சுப. சபாபதியைப் பாராட்டிப் பலர் பேசினார்கள். சிறப்பு விருந்தினர்களுக்குப் பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கப் பெற்றது.

திரு. அண. சோமசுந்தரம் நன்றி நவின்றார்.

வேந்தன்பட்டி நகரத்தார்களின் தீர்மானங்கள்

வேந்தன்பட்டியைச் சேர்ந்த நகரத்தார்கள் அனைவரும் 8-6-90 அன்று கூடி புதிதாக ஐந்து தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவை ஐந்தும் பிரமோதூத ஸ்ரீ ஐப்பசி மீ முதல் நாளிலிருந்து (18-10-90) நடைமுறைப்படுத்தப்படுமென வும் அறிவித்திருக்கிறார்கள். அவையாவன:-

1. திருமண வீட்டில் பெண் வீட்டாரோ மாப்பிள்ளை வீட்டாரோ நேரிடையாகவோ மறைமுகமாகவோ மாமியார் சாமான் உட்பட எதுவும் பரப்புவதில்லை.

2. திருமண வீட்டில் மனைக்கு மண் எடுக்கும் முறை செய்வதில்லை.

3. திருமண வீட்டில் மணமகன் குதிரை ஏறுவதில்லை.

4 துக்க காரியத்தில் தண்ணீர் தூக்க வெளியில் செல்வதில்லை.

நகரத்தார் ஐக்கிய சங்கத்தின் அறிவிப்பு

இந்த ஆண்டும் பிளஸ்டு தேர்வில் மாநில அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் டாக்டர் எம். ஏ எம். இராமசாமி அவர்கள், அவர்களுடைய அறக்கட்டளையிலிருந்து கல்லூரிக் கட்டணம், விடுதிக் கட்டணம் ஆகியவற்றுக்கு உயர்ந்தபட்ச இலவச உதவியாக தலா ரூ. 5000/- வழங்க இருக்கிறார்கள். அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியர் மதிப்பெண் பட்டியல் நகல், கல்லூரியில் சேர்ந்துள்ளதற்கான அத்தாட்சிக் கடிதம், குடும்ப விவரம் முதலியவற்றை இணைத்து நகரத்தார் ஐக்கிய சங்கம், 88, பவளக்காரத் தெரு, சென்னை-600001 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

'நானும் ஒரு நகரத்தார்'...

தமிழண்ணல்

8. முத்தமிழ் போற்றிடும் நகரத்தார் முன்னேற மூன்று யோசனைகள்

பெண்ணுக்குப் பணம் கொடுப்பதைத் தடுக்க, நற்சாந்துபட்டிப் பகுதியில் ராய செ தலைமையில் மாப்பிள்ளை அழைக்கும்போதே மறியல் நடத்தியிருக்கிறார்கள். தெருவில் உட்கார்ந்து, மேள தாளம் நகரவிடாமல் செய்ததால், அப்போதைக்குப் பணம் வாங்கவில்லை என்றுகூறி, பிறகு இரகசியமாக எல்லாம் நடந்ததாம்! ஆனால் இன்றைய நிலை என்ன? பெண் வீட்டார் பணம் கொடுக்க வேண்டிய கட்டாய நிலை இன்று. அதனால் பெண்களுக்குத் திருமணமாகாமல் திண்டாடும் நிலை அதாவது இரண்டு மூன்று தலைமுறைக்கு முன்னால் ஆண்வர்க்கம் பணம் கொடுக்க மாட்டாமல் திண்டாடிய நிலை. இதனை யான் கற்பனையாக எழுதவில்லை. நெற்குப்பையில் என் தந்தையார் மூத்தவராதலால், என் தாயாருக்கு முப்பதாயிரம் கொடுத்துத் தான் திருமணம் நடந்ததாம். அவ்வாறு பணம் கொடுத்துப் பெண் கொள்ள முடியாத நிலையில், என் சிறியதந்தையார் ஒருவரைக் காரைக்குடிக்குப் பிள்ளை விட்டார்கள்; மற்றொருவர் இளைய சித்தப்பா திருமணம் ஆகாமலே, காலமான துக்ககரமான சம்பவம் மனதை விட்டு அகலவில்லை!

இப்போது எவ்வளவோ மாறுதல்! தலைகீழ் மாறுதல்! திருமணமின்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டு விட்டது.

இன்று நம் முன்னாலுள்ள சமூகப் பிரச்சினைகள் மூன்று: ஒன்று - கன்னிப் பெண்கள் பலர் திருமணமாகாமல் கண்ணீர் விடுவது. இரண்டு - கல்வித் துறையில் 'முனனேறிய வகுப்பு' எனக் கூறி அரசாங்கச் சலுகைகளை இழப்பதால் நம் பிள்ளைகள் விரும்பிய படிப்புப் படிக்க இடமின்றிக் கவலைப்படுவது. மூன்று குறிப்பிட்ட விழுக்காட்டினர் மட்டும் தொழில் துறையில் சீரும் சிறப்புமுற்றுத் திகழ, மற்றவர்கள் சமுகத்தின் அடிமட்டத்தில் கிடந்து உழல்வது.

இவை நீங்க எனது மூன்று யோசனைகள் இவைதான். இவற்றை ஒரு 'சபத'மாக எடுத்துக் கொண்டு, நிறைவேற்ற முழு மூச்சுடன் ஈடுபட யாரும் முன் வருவார்களேயானால் நிச்சயம் பயனுண்டு.

ஃ ஃ ஃ

மீனாட்சிதிருமைந்தரின் மகன் செல்வன் நாகப்பன, செல்வி கீதாவை மணந்த திருமணத்தில், வாழ்த்துரை வழங்கிய முன்னாளமைச்சர் இராசாராம் அவர்கள் ஒரு நல்ல யோசனையைத் தெரிவித்தார். ''நகரத்தார் பைனான்ஸ்'' என்று ஒன்றை, நகரத்தாரனைவரும் கூடித் தொடங்க வேண்டும் என்றார் அவர். கோடிக் கணக்கில் அதில் நகரத்தார்களே முதலீடு செய்யும்படி செய்ய வேண்டும். இன்றைய பெரும்பணக்காரர்கள் அனைவரையும் அதில் பங்கு கொள்ளச் செய்ய வேண்டும். நகரத்தார் ஊர்களிலும், அவர்கள் கூடுதலாக வசிக்கும் நகரங்களிலும் கிளைகள் அமைத்து, கோடி கோடியாகத் தொகுக்கவேண்டும். அதில், திட்டமிட்டுப் பெரும் பகுதி நகரத்தார் தொழில், வணிக மேம்பாட்டிற்கும், நகரத்தார்களின் ஊர்களின் தொழில் வளர்ச்சிக்கும் மற்றும் அங்குள்ள அனைவரது பொது நலனுக்கும் பயன்படுத்த வேண்டும்.

பிறகு அதிலிருந்து கடன் வசதி, அறக்கட்டளை நிறுவித் திருமணங்களுக்கு உதவுதல், வீடு கட்ட உதவுதல், சிறுதொழில் தொடங்க உதவுதல் எனப் பல வகைகளில் உதவலாம்.

நகரத்தார்களிடம் மிகுந்த அன்புள்ள மேதகு இராசாராம் அவர்கள், நகரத்தார் சமுக மேம்பாடு கருதிச் சொன்ன நல்ல அறிவுரை இது.

ஆனால் அன்று சோழபுரத்திற்குத் திருமணத்திற்கு வந்திருந்தவர்களில் எத்தனைபேர் இதைக் காதில் போட்டுக்கொண்டார்கள் என்று தெரியவில்லை. 'பூனைக்கு யார் மணி கட்டுவது' என்ற கதையாகப் போகாமல், யாரேனும் தக்கவர்கள் முயற்சியெடுக்க முன்வந்தால் இது நடக்கும். 'தாம்பிராஸ்' எனப்படும் பிராமண சமுக அமைப்பு அண்மையில் தோன்றிச் செய்துவரும் பணிகளை இதழ்களில் படித்திருப்பீர்கள்.

ஃ ஃ ஃ

இரண்டாவதாக நகரத்தார்களுக்குக் கல்வி வசதி பெருக, ''மைனாரிட்டி கல்லூரிகள்'' என்ற விதிப்படியான கல்வி நிறுவனங்கள் தொடங்க வேண்டும். நகரத்தார்களின் 86 ஊர்களுக்கு மத்தியில், ஆங்காங்கு மகளிர் கல்லூரிகள் நிறுவ வேண்டும். பொறியியல், மருத்துவ இயல், கல்வியியல், வேளாண்மை இயல் மற்றும் கலைக் கல்லூரிகள் ஒவ்வொன்றேனும் இவ்வாறு - விதிகளைத் தேடியெடுத்துப் பயன்படுமாறு தொடங்கவேண்டும்.

நகரத்தார் பெண்கள் நூற்றுக்கு நூறு மேனிலைப் பள்ளி முடிய வேணும் படிக்கத் தக்கவாறு பள்ளிகளும் தொடங்க வேண்டும். கல்வி வசதியைப் பெருக்க, நகரத்தார் சங்கங்கள் கூடி ஆராய வேண்டும். பண வசதிமிக்க மிக மிகப் பெரிய நகரத்தார் குடும்பங்கள் பல நகரத்தார் சமுக வளர்ச்சிக்கு உதவ இயலாதவாறு, விலகியே நிற்கின்றனர். அவர்களையும் சமுகக் கோட்டிற்குள் கொணர முயற்சி எடுக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

மூன்றாவதாக, மேற்கூறியபடி இன்று நாடெங்கும் இருக்கிற நகரத்தார் சங்கங்களின் தலைமைச் சார்பாளர்கள், செயற்குழுவினர் ஆண்டுக்கு ஒருமுறை இருமுறை ஓரிடத்தில் கூடவேண்டும். இன்று சங்கங்கள் தனித் தனியே செயற்படுகின்றன. இத்தகைய சங்கங்களின் பிரதிநிதிகள் கூடும் கூட்டம் தக்க தீர்மானங்களை நிறைவேற்றிச் செயற்படுத்தலாம். நகரத்தார்களிடை-யே சீர்திருத்தப் பிரச்சாரம் செய்ய வழிவகை காணலாம். சமுகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானங்களாக நிறைவேற்றி அவற்றைச் செயற்படுத்துவதைக் கண்காணிக்கலாம்.

கன்னியாகுமரி முதல் புதுதில்லி வரை எங்கெங்கு நகரத்தார் சங்கங்கள் உள்ளனவோ, அங்கெல்லாம் உள்ள சங்கங்களின் முகவரிகள் தொகுக்கப்பட வேண்டும். வெளிநாடுகளில் உள்ள (மலேசியா, சிங்கப்பூர்) நகரத்தார் சங்கங்களின் முகவரிகளும் வேண்டும். பிறகு அனைவருக்கும் எழுதி, உறுப்பினராக்க வேண்டும். பின்னர் அனைத்துச் சங்கங்களின் மாநாட்டுக் கருத்தரங்கு (Conference Seminar) ஒன்றைக் கூட்ட வேண்டும். அதில் முற்கூறியவாறு

1. நகரத்தார் நிதி நிறுவனம் (Nagarathar Finance)

2. நகரத்தார் நலம் போற்ற உதவும் வகையில் சிறுபான்மையினர் பள்ளிகள், கல்லூரிகள் நிறுவுதல்

3 சமுக விதிகளைத் தீர்மானித்து நிறைவேற்றுதல்- சமுக சீர்திருத்தங்களைச் சிறுகச் சிறுகப் படிப்படியாக நகரத்தார் மக்கள் ஏற்கச் செய்தல்.

போன்றவற்றைப் பற்றி ஆலோசித்து, முடிவெடுத்துச் செயற் படுத்தலாம். இன்னும் நல்ல பல காரியங்களை நிறைவேற்ற முடியும்.

யார் முயற்சி எடுப்பது? எங்கே? எப்போது? இந்த யோசனைகளைப் பற்றிய, தமது கருத்துக்களை, இதைப் படிக்கும் வாசகர் ஒவ்வொருவரும் அஞ்சலட்டையில் எழுதி, நகரத்தார் குரலுக்கு அவசியம் அனுப்ப வேண்டுகிறேன்.

(வளரும்)

துவார்
கோயில் கூட்டம்

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் செவ்வூர் அருகேயுள்ள துவார் வள்ளிலிங்கம் கோயில் திருப்பணி விஷயமாகப் பேசுவதற்கு அக் கோயிலைச் சேர்ந்த நகரத்தார்கள் கூட்டம் 9—9—90 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-30 மணி அளவில் புதுக் கோட்டை மத்திய அஞ்சல் அலுவலகம் எதிரேயுள்ள M. காம்ளெக்ஸில் நடைபெறவிருப்பதாகவும் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படியும் சொக்கலிங்கம் புதூர் சு. கரு. பழநியப்பன் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

உங்கள் சேமிப்பு வேகமாக வளர

மதுரை வங்கியின் ரொக்கப் பத்திரத் திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்

காலம் மாதங்களில்	12	24	36	48	60	120
இறுதியில் ரூ. 1000 கிடைக்க முதலீடு செய்ய வேண்டிய தொகை.	914.80	820.70	743.60	673.60	610 30	372.40

மதுரை வங்கி லிட்.

மத்திய அலுவலகம்: 758, அண்ணா சாலை, சென்னை - 600 002.

சுப. சபாபதி சேர்மன்

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் திரு. சி. சேதுராமன் மதுரை ஜெயின் வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளியில் 10 ஆம் வகுப்பில் படித்து கடந்த பிப்ரவரி' 90ல் நடைபெற்ற பொதுத் தேர்வில் 1100க்கு 897 மதிப் பெண்கள் பெற்றுள்ளார். இவர் தமிழில் 200க்கு 166 மதிப்பெண்களும் வரலாறு பாடத்தில் 100க்கு 91 மதிப்பெண்களும் பெற்று பள்ளி



யில் முதல் மாணவராகவும் ஆங்கிலத்தில் 200க்கு 143 மதிப் பெண்கள் பெற்று பள்ளியில் இரண்டாவது மாணவராகவும் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இவர் விரையாச்சிலை திரு பிஎல். எம். சின்னப் பழநியப்பன் திருமதி சி. விசாலாட்சி ஆச்சியின் புதல்வராவார். திரு. சி. சேதுராமனின் திறமையைப் பாராட்டுகிறோம்.

ஈரோட்டில் நகர விடுதி

ஈரோட்டில் மண்டப வீதி கதவு எண் 9ல் இயங்கி வரும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கக் கட்டிடம் தற்போது நகர விடுதியாகவும் செயல்பட்டு வருகிறது என்றும் ஈரோடு வரும் நகரத்தார் பெருமக்கள் அதில் தங்கிக் கொள்ள லாக்கர் வசதி உள்பட எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் மேலாளர் ஒருவர் எப்போதும் அக் கட்டிடத்தில் இருப்பதாகவும் மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு. நா. இராமநாதன் தெரிவித்திருக்கிறார்.

திருமணம்

காரைக்குடி முரு. லெ. நா. நா. சோமையா செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் முருகப்பன் B Com. க்கும் (KB டிராவல்ஸ் மதுரை) பாகனேரி அ. வெ. அருணாசலம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி மீனாட்சிக்கும் 9-4-90 அன்று பாகனேரியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மதுரை எம். பி. என் சேதுராமன் பொன்னுச்சாமி சகோதரர்கள் நாதசுரம் வாசிக்க வேதாரண்யம் பாலசுப்பிரமணியமும் பழநி முத்துமாணிக்கமும் சிறப்புத் தவில் வாசித்தனர்.

15-4-90 அன்று மதுரை ஹோட்டல் ஆர்த்தியில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி மற்றும் முக்கியஸ்தர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தனர்.

சோக்கலிங்கம்புதூர் நகரச் சிவாலயத்தில் திருக்கல்யாணம், பொற்றுலி வழங்கும் விழா!

அழ. அ. அழகப்பன், சொக்கலிங்கம்புதூர்

காரைக்குடியிலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஒரு சிறிய ஊர் சொக்கலிங்கம்புதூர் ஆகும். இந்தச் சிற்றூரில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் நகரச் சிவாலயம் தோன்றிச் சுமார் 71 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரை பல குட நீராட்டு விழாக்கள் நடைபெற்றுள்ளன. எல்லாமே ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்திலேயே நடைபெற்றுள்ளது, சிறப்பிற்குரியது. 1975-லும் 1987 லும் குட நீராட்டு விழாக்கள் நடைபெற்றுள்ளன, 1975- ஆம் ஆண்டு குட நீராட்டு விழாவிற்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் வருடாபிடேக விழா நடைபெற்று வருகிறது. 1975 ஆம் ஆண்டு குட நீராட்டு விழாவைத் தொடர்ந்து நடைபெற்ற மண்டலாபிஷேகத்தில் திருக்கல்யாணம் நடைபெற்றது. அப்பொழுது அன்னை மீனாட்சி கனவில் தந்த அருள்வாக்கிற் கிணங்க திரு. அழ. அ. அழகப்பன் மூலம் திருப்பொற்றுலி செய்து அம்பாளுக்குச் சாத்தி, அதனைக் கட்டணம் செலுத்திய 39 திருமணம் ஆகாத

பெண்களுக்கும், ஆண்களுக்கும் வாழ்த்துடன் வழங்கினர்கள். அன்னை மீனாட்சியின் அருளால் அடுத்த ஆண்டிற்குள் பொற்றாலி பெற்றுக் கொண்ட எல்லோருக்கும் திருமணம் நடைபெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் அரு. முருகப்பன் அவர்களின் உபயமாக வருடாபிடேக விழாவும், மூ. ராம. முத்தையா அவர்களின் உபயமாக திருக்கல்யாண நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆண்டுதோறும் பொற்றாலி வழங்கும் விழா சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. இரவு பஞ்சமூர்த்தி திருவீதி உலாவும் ஊரார் ஒத்துழைப்புடன் நடைபெறுகிறது இதுவரை பல்வேறு ஊர்களிலிருந்தும் வந்து நூற்றுக்கனக்கான திருமணம் ஆகாத பெண்கள் பொற்றாலி பெற்றுப் பயனடைந்துள்ளனர்.


இந்த ஆண்டு 2-7-90 அன்று இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 175 பெண்களுக்குப் பொற்றாலிகள் வழங்கப் பெற்றன. பொற்றாலிக்கு இந்த ஆண்டு ரூ. 95/- எனக் கட்டணம் நிர்ணயிக்கப் பெற்றிருந்தது. வருடாபிடேகத்திற்கு காலைப் பலகாரம் மூ. ராம. முத்தையா அவர்கள் வீட்டிலும், மதிய உணவு நகரத்தார்கள் சார்பாக கோவில் வீட்டிலும் இரவு உணவு அரு. முருகப்பன் அவர்கள் வீட்டிலும் எல்லோருக்கும் வழங்கப் பெற்றது.

நிறைபலன் கண்டதன் விளைவாக ஆண்டுதோறும் தாலி பெற விரும்புவோர் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது.

சொக்கலிங்கம் புதூர் நகரத்தார் இதனை லாபம் கருதாது ஒரு சமுதாயத் தொண்டாகக் கருதி சிறப்பாகச் செய்து வருகின்றனர்.

திருமணம்

தேவகோட்டை செ. அ. சோம. இராம. அண்ணாமலை செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் திருநாவுக்கரசு D.T.T.க்கும் தேவகோட்டை தெ வெ. வயி செந்தில்நாதன் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி உமையாளுக்கும் 3-6-90 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.



மணிவண்ணன் மடல்..

8. திருமணச் செலவைச் சுருக்க...

அன்புள்ள அண்ணனுக்கு

திருமங்கல நாண் என்பது மங்கலமாக, மஞ்சள் தோய்த்துக் கட்டப்படும் கயிற்றையே குறிக்கும் என்று எழுதியிருந்தேன். கயிற்றையா கட்டிக்கொள்வது என்று கேட்பீர்கள். நம் முன்னோர் உருவாக்கிய கழுத்துருவை (கழுத்துத் திரு) நினைத்துப் பாருங்கள். 'திரு' எனப்படும் லெட்சுமி உட்பட்ட 31 உருப்படிகள் மஞ்சட் கயிற்றில் கோத்து அமைப்பதுதானே கழுத்துரு? வடமொழியில் 'மாங்கல்ய சூத்திரம்' என்பர். சூத்திரம் என்றால் கயிறு காப்பாகக் கட்டப்படும் அனைத்தும் கயிறுதான். மந்திரித்துக் கட்டுவதும் கயிறுதான். ஆகவே மஞ்சட் கயிற்றில சிறு மாங்கல்யம் கோத்து அணிந்து கொள்ளலாம்.

நான் வரதட்சிணை, சீதனம்- இரண்டிற்கும் வரையறை செய்யலாம் என்று குறிப்பிட்டிருந்த தொகை மிகவும் குறைவு என்று சிலர் வாதிக்கலாம். பையன் வீட்டாருக்குத் திருமணச் செலவு மிகுதியாக வருகிறது என்று காரணம் சொல்லலாம். அதனால் திருமண நிகழ்ச்சியைப் பொறுத்தவரை எவ்வாறு செலவைச் சுருக்கலாம் என்று என் யோசனைகள் சிலவற்றை இங்குத் தருகின்றேன்.

முதலாவதாக நம் நடைமுறையில் உள்ள ஒரு முரண்பாட்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாளன்றை வாழ்வில் மிகவும் சிக்கனமாக உள்ளவர்கள் நாம். உணவுப் பொருள்களையும் 'வருசத்துக்கு' வாங்கிப் பணத்தை மிச்சப் படுத்துவோம். மாகாணிக் கணக்கையும் மணி நேரம் பார்ப்போம். பத்துப்

பைசா இருப்பில் குறைந்தால் பத்துமணி தூக்கம் கொள்ள மாட்டோம், அத்தகைய நாம், திருமணத்தில் மட்டும் அகல இலை போட்டு, எட்டு வகை வெஞ்சனம் வைத்து, ஊரை அழைத்து விருந்து வைக்கின்றோம். 'மாநகருக்கு ஈந்தார் பணம்' என்பது, கோவலன்-கண்ணகியின் பெற்றோருக்குக் கட்டி வந்தது. இருபதாம் நூற்றாண்டில், துண்டுவிழும் 'பட்ஜெட்டில்' குடும்பம் நடத்தும் நமககுக் கட்டி வருமா?

ஆயினும் செய்கிறோம். பையன் வீட்டார், பெண் வீட்டாரிடம் அதிக வரதட்சிணை வாங்கி, கலியாணத்தில் 'ஆடித் தீர்க்கிறார்கள்'! பெண்ணைப் பெற்றவன் வரதட்சிணை கொடுப்பதற்கும் கடன் வாங்கி, கலியாணச் செலவிற்கும் கடன் வாங்கி, வாழ்நாள் எல்லாம் வேதனைக் குள்ளாகின்றான். இந்த முரண்பாடு நீங்க வேண்டும். வாழ்க்கையில் காட்டும் சிக்கனத்தைத் திருமணத்திலும் கைக்கொள்ள வேண்டும்.

இக்காலப் பெண்கள் அணிய விரும்பாதவை ஆகிய பட்டுச் சேலைகளை 8, 10 என்று வாங்குவதைத் தவிர்த்தால் பெருஞ் செலவு சுருங்கும். மாப்பிள்ளை, பெண் - இவர்களுக்கு வைக்கும் உடை, மற்ற பொருள்களைப் பரப்பி வைத்து, ஊருக்குக் காட்டுவதில் கொள்ளும் பெருமைக்காக, தேவையில்லாத செலவு செய்கின்றோம். 'சாமான் பரப்புவதை' நிறுத்த வேண்டும். கடனாளியாகித்தான் களிப்பு அடைய வேண்டுமா?

நம் சமூகத்தைத் தவிரப் பிற சமூகத்தார், தாம் வாழும் ஊரிலேயே திருமணம் நடத்துகின்றனர். நாம் சொந்த ஊரில்தான் நடத்துவது என்ற வழக்கத்தை இன்னும் பின்பற்றி, திருமணம் நடத்தும் குடும்பங்களுக்கும் கலந்து கொள்ளும் உறவினர்களுக்கும் செலவையும் சிரமத்தையும உண்டாக்குகின்றோம்.

இப்பொழுது நம்மில் சில செல்வர்கள் சென்னை போன்ற நகரங்களில் திருமணம் செய்வித்து வழிகாட்டியுள்ளார்கள். அதைப் பின்பற்றி, மற்றவர்களும் அவர்கள் வாழும் ஊரில் திருமண மண்டபம் அல்லது கோவிலில் திருமணத்தை நடத்தலாம். உறவினர்கள், பங்காளிகள் எல்லோரும் வரவேண்டும் என்ற கட்டாயத்தை விட்டு விடலாம், இயன்ற சூழ்நிலை உள்ளவர்கள் வந்தால் போதும் என்று, திருமண வீட்டாரும், உறவினரும் மன நிறைவு செய்து கொள்ள வேண்டும். இக் காலச் சூழல் அவ்வாறு இருக்கிறது.

திருமண மண்டபம், அல்லது கோயிலில் இரண்டு சம்பந்திகளுக்கும் பொதுச் செலவில், ஒரு வேளைஉணவுடன் திருமணத்தை முடிககலாம். சொந்த ஊரில வாழ்வோர் தமது, ஊர்க்கோயில் அல்லது குலக் கோவிலில் மேலே சொல்லியவாறு திருமணம் நடத்தலாம். முன்பு ஒரு காலத்தில் குலக் கோயிலில் திருமணத்தை நடத்தியதன் அடையாளம்தான் நாம் இன்று பாககு வைககும் வழக்கம். கிறித்தவர் மாதா கோயிலில் திருமணம் நடத்துவதைப் பாருங்கள். நம் ஒன்பது நகரக் கோயில்களில், பெரும்பாலனவற்றில் திருமணத்திற்கு வேண்டிய எல்லா வசதிகளும் உள்ளன.

திருமணத்திற்கு அதிகச் செலவாகிறது; அதனால் மிகுதியாக வரதட்சிணை வேண்டும என்ற வாதத்திற்கு, மேலே விடை சொல்லியிருக்கின்றேன். காலத்திற்கு ஏற்ற சீர்திருத்தங்களை மேற்கொண்டால் தான் சமூகம் வாழும். ஆற்றில் வெள்ளம் வரும் போது வளைந்து கொடுக்கும் நாணல் தப்பிவிடுகின்றது.

ஆனால் நிமிர்ந்து நிற்கும் மரங்கள் வேரோடு சாய்க்கப் படுகின்றன.

மற்றபடி, மாப்பிள்ளை விட்டாரின் வகை, மாப்பிள்ளையின் படிப்பு, வேலை, வருவாய் - இவற்றைப் பொறுத்து 'ரேட்' வைத்து வரதட்சிணை வாங்குவதும் விலைவாசிப் புள்ளி ஏறுவது போல் வரதட்சிணை ஏறிக்கொண்டே செல்வதும் நாம், நம்மை அறியாமலே செய்து வரும் சமுதாய அநீதி. நம் சமூகக் கன்னிப் பெண்களை வாழ இயலாமல் செய்யும் அநியாயம். பெண்களைப் பெற்ற தந்தைகளை - தாய்மார்களைப் பெரிய வேதனைக்குள்ளாக்கி, பெண் குழந்தையைக் கருவிலேயே அழித்துவிடத் தூண்டும் கொடுமை. திருமணமான பின்பும் பெண்களுக்கு நீங்காத பேரிடியாக மாமியார் வீட்டில் சொல்லாலும், செயலாலும் சித்திரவதைப் படுத்தப்படும் கொடூரத்திற்குக் காரணம் ஆகிறது.

நாட்டில் உள்ளவர்களுக்கு எல்லாம் தருமம் செய்யும் நகரத்தார் இவ்வரதட்சிணைத் தீமையை இனிமேலும் அனுமதிக்கலாமா?

இது, 'தாயைப் பட்டினி போட்டுத் தானம் வழங்குவதைப்' போன்றது அல்லவா?

அன்புள்ள

மணிவண்ணன்

செட்டிநாட்டில் முதியோர் இல்லம்

எஸ். அண்ணுமலே, கோட்டையூர்

(முன்னுள் தலைவர், நகரத்தார் சங்கம், திருச்சி)

செட்டி நாட்டில் வயதான செட்டியார்களும், ஆச்சிமார்களும் தற்போது சரியான பாதுகாப்பின்றி வாழ்ந்து வருகிருர்கள் பல வீடுகளில் பெண்கள் அனைவரும் திருமணமாகி கணவன் வீடு சென்ற பிறகு, பையன்கள் அனைவரும் படித்து திருமணமாகி தொழில் நிமித்தம் வேலை நிமித்தம் வெவ்வேறு ஊர்களில் வாழ்ந்து வரும் நிலையில், அவர்களது வயதான பெற்ருேர்கள், ஊரில் தனித்து விடப்படுகிருர்கள். ஓரளவு பண வசதியிருந்தாலும், அவர்களுக்கு வேண்டிய உணவு, மருத்துவ வசதிகளைச் செய்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லை. வயதான காலத்தில் அவர்களுக்குச் சரியான துணை இல்லை. உடல்நிலை சரியில்லையென்ருல் அவர்களை மருத்துவர்களிடம் அழைத்துச் செல்ல யாரும் கிடையாது. தனிமை அவர்களை வாட்டுகிறது. தன் வீட்டிலோ அல்லது உற்ருர் உறவினர் வீட்டிலோ, விசேடங்கள் நிகழும்போது தான், அவர்கள் தங்கள் பெண், பிள்ளைகளையும், மற்ற உறவினர்களையும் பார்க்க முடிகிறது.

இம்மாதிரித் தனித்து விடப்பட்ட பெரியவர்கள், தங்கள் பிள்ளைகளுடன் போய் இருந்து வருவதிலும் பல நடைமுறைச் சிரமங்கள் இருக்கின்றன. மகன், மருமகளுடன் ஒத்துப் போவதில்

உள்ள கஷ்டங்கள்; அனுசரித்துப் போக இயலாத பழக்க வழக்கங்கள் ஆகிய பலவற்றை இதற்குக் காரணங்களாகச் சொல்லலாம். பொதுவாக வயதானவர்கள் செட்டநாட்டை விட்டு வெளியே சென்று வசிக்க விரும்புவதில்லை.

இவற்றுக்கெல்லாம் பரிகாரம் காணும் விதமாக பல சேவை நிறுவனங்கள், வெவ்வேறு நகரங்களில் நடத்தி வருவது போல நம் செட்டி நாட்டிலும், மையமான ஒரு இடத்தில், முதியோர் இல்லம் ஒன்று இருப்பது அவசியம் என்ற கருத்து பரவலாக இருந்து வருகிறது. இது சம்பந்தமாக நம்மவர்களில் பலர் ஏற்கனவே விவரங்கள் சேகரித்து இருக்கிறார்கள். ஆனால் முழுமையான முயற்சி இதுவரை தொடங்கப்படவில்லை.

நம் நகரத்தார்களின் குரு பீடமான கோவிலூரில் இதைத் தொடங்குவதற்கு எல்லா விதமான உதவிகளையும் செய்து தருவதாக ஆதீனகர்த்தர் அவர்கள ஆசி கூறியிருக்கிறார்கள்.

திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பாக கூட்டுத் திருமணங்கள் நடத்தி சமூகப் பணியில் ஈடுபட்டிருக்கும் எங்களில் சிலர் இதனைத் தொடங்குவதில் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கிறோம். இம்மாதிரி இல்லம் தொடங்கினால் அதை முழுவதுமாக நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இதைத் தொடங்குவதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சிலவற்றைக் கீழே குறிப்பிட்டிருக்கிறேன்.

1. இந்த முதியோர் இல்லம் இலவசமாக நடத்தப்படுவது அல்ல. இதில் சேருபவர்கள் மாதம் ஒரு குறிப்பிட்ட தொகை -யை (சுமார் ரூ. 400/-) இல்லத்துக்குச் செலுத்த வேண்டும்.

2. அவர்களுக்கு வேண்டிய உண்டி, உறையுள், மருத்துவ வசதி அனைத்தும் செய்து கொடுக்கப்படும். பக்தியோடு இணைந்த அமைதியான வாழ்க்கை அமைத்துத் தரப்படும்.

3. முதியோர் இல்லத்துக்குத் தேவையான இட வசதி, இதர தொடக்கச் செலவுகளுக்கு ஓரளவு நிதி தேவைப்படும்.

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் செல்வி ஆர்எம். விசாலாட்சி ஈரோடு அரசு பெண்கள் பள்ளியில் படித்து கடந்த மார்ச்'90ல் நடைபெற்ற 10ஆம் வகுப்புத் தேர்வில் 500க்கு 469 மதிப் பெண்கள் பெற்று ஈரோடு கல்வி மாவட்டத்திலேயே முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றிருக்கிறார். இவர் காரைக்குடி



ஆயிரம் ஜன்னல் வீட்டைச் சேர்ந்த திரு என். இராமநாதன் செட்டியார் - திருமதி ஆர் எம். லெட்சுமியின் புதல்வியாவார். தந்தையார் ஈரோடு நகரத்தார் சங்கத்தின் செயலாளர். செல்வி ஆர்எம் விசாலாட்சியின் ஆர்வத்தையும் திறமையையும் பாராட்டுகிறோம்.

4. இந்த இல்லத்தை ஒரு Trust மூலமாக நிர்வகிக்கலாம்.

இந்தத் திட்டம் நல்ல முறையில் சிறந்த நிர்வாக அமைப்புடன் செயல்பட்டால் - நகரத்தார் சமூகத்தில் வசதிக் குறைவான வீட்டுப் பெண்களுக்கு கூட்டுத் திருமணம் உதவுவது போல இந்த இல்லமும் நகரத்தார் முதியவர்கள் வயதான காலத்தில் நிம்மதியாகவும் நல்ல பாதுகாப்புடனும் வாழ்வதற்கு வழி வகுப்பதாக அமையும்.

இது சம்பந்தமாக அன்பர்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் திரு. S. அண்ணாமலை, D. 37, 7th Cross, தில்லைநகர், திருச்சி-620018 என்றமுகவரிக்கு எழுதுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இராமேஸ்வரம் - காசி நடைப் பயண பக்தர்களுக்கு வரவேற்பு

திருத்தொண்டர் திரு. ஆர். வயிரவன் தலைமையில் இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு வழி நடைப் பயணமாகச் சென்று வெற்றிகரமாகத் திரும்பிய 19 பேர் கொண்ட குழுவினருக்கு மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமையில் 14-7-90 அன்று மாலை நகர விடுதியில் வரவேற்பும் பாராட்டும் அளிக்கப் பெற்றது.

திரு. கு. வெ. கு. வெங்கடாசலம் செட்டியார் இறைவணக்கம் பாட செயலாளர் திரு. எம். சின் மாணிக்கம் வரவேற்றுப் பேசினார். லெ. நாராயணன் செட்டியார் அவர்கள் தலைமை உரையாற்றினார்கள். அவர்களைத் தொடர்ந்து கருமுத்து திரு. தி சு. சொக்கலிங்கம் செட்டியார், 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன், தமிழாகரர் முனைவர் திரு. சுப. அண்ணாமலை பேராசிரியர் திரு. சொ. சொ. மீ. சுந்தரம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

விழாவில் 'காசிஸ்ரீ' திரு. வெள்ளையன் 'இராமேஸ்வரா, காசி விஸ்வேஸ்வரா' என்று தொடங்கும் பாடலைப் பாடினார். திரு. ஆர். வயிரவன் ஏற்புரை வழங்கினார்.

வழிநடைப் பயணம் சென்று வந்த பக்தர்களுக்கு நகரத்தார் சங்கத்தின் சார்பாகவும், நகரத்தார் புத்தக வங்கி சார்பாகவும் மங்கையர்க் கரசி நூற்பாலை சார்பாகவும் கண்டரமாணிக்கம் மு. சிநா. குடும்பத்தார் சார்பாகவும் பொன்னாடைகள் மலர் மாலைகள் அணிவிக்கப் பெற்றன. திரு எம். சின். மாணிக்கம் நன்றி கூறினார்.

காசி சென்று திரும்பிய பக்தர்களுக்கு அளித்த வரவேற்பு நிகழ்ச்சியில்...

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றுபவர்கள் நகரத்தார்கள். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு திட்டம் வகுத்து 'காசிஸ்ரீ' அரு. சோ. தலைமையில் ஒரு குழு காசி சென்று வந்தது. புனிதப் பயணம் மேற்கொள்வது நமக்குப் புதிதல்ல இந்தப் பயணங்கள் அன்பினைப் பெருக்கும்; பண்பினைப் பெருக்கும். இந்தப பயணங்கள் ஆண்டவனிடத்திலே நாம் கொண்டுள்ள உறுதியை வெளிப்படுத்துகின்றன. இது மேலும் பெருகி வளர வேண்டும்.

— லெ. நாராயணன் செட்டியார்

தேவாரம், திருவாசகம் படிக்க இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும். உண்மையான பக்தியை. சக்தியைப் பாராட்ட வேண்டும். பல புண்ணிய தலங்களுக்கு வழிநடையாக இவர்கள் சென்று வந்தது பயனுடையது; சிறப்புடையது. காசி விஸ்வநாதர் கோயிலைத் திருப்பணி செய்யப் போகின்றோம்.

— கருமுத்து சு. சொக்கலிங்கம் செட்டியார்

காசிக்குச் சென்று வந்தவர்களைக் கும்பிடுவது வழக்கம். காலாலேயே நடந்து சென்று வந்தவர்களை எப்போதும் கும்பிடவேண்டும். நாத்திகம் பெருகிவருகிற இன்றைய நிலையில் இது உலக அதிசயம். பல கடுமைகளுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாகி வெற்றிகரமாகப் பயணத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள் உங்களை வணங்குகிற குடும்பங்கள் நன்றாக இருக்க வேண்டும். வேறு எந்த இனத்தவரும் செய்யாத வகையில் நம்மவர்கள் காசியில் மூன்று கால பூஜைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் மீண்டும் மீண்டும் இந்தப் பயணம் தொடர வேண்டும். இந்திய ஒருமைப்பாடு வளர இது போன்ற பயணங்கள் தேவை.

— முனைவர் சுப. அண்ணாமலை

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு அடியேன் தலைமையில் 13 பேர் வழி நடைப் பயணமாக காசி சென்று வந்தோம். இன்றைக்கு 19 பேர் சென்று வந்திருக்கிறார்கள். இது தற்செயலான நிகழ்ச்சி அல்ல. சிந்தனையில் உருவான திட்டம். வழி நடைப் பயணத்தைக் காரைக்கால் அம்மையார் தொடங்கி வைத்தார்கள். இது உயிரைப் பணயம் வைத்துச் சென்று வந்த பயணம் ஊர்களைத் தேர்வு செய்ய மட்டும் 5 ஆண்டுகள் பிடித்தது. இது அக்கினிப் பரீட்சை. பாராட்டுக்கு மேற்பட்ட சேவை இது.

— 'காசிஸ்ரீ' அரு. சோமசுந்தரன்

(இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு வழி நடைப் பயணமாகச் சென்று வந்த பக்தர்களுக்கு மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பாக 14-7-90 அன்று அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் பேசியவை.)



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ நகரக் கோயில்களில் ஒன்ருன நேமம் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழா வருகிற தை மாதம் நடைபெறும் எனக் கூறப் படுகிறது.

ஃ மதுரை வங்கி பண்பாட்டுப் பேரவையின் சார்பில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள திரு அரு. லெட்சுமணன் அவர்களுக்கு சென்னையில் 19-7-90 அன்று பாராட்டு விழா நடைபெற்றது.

ஃ காரைக்குடி நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றத்தின் சார்பில் ஆடிப்பூரத் திருவிழாவை முன்னிட்டு காரைக்குடி நகரச் சிவன் கோவிலில் 17-7-90 அன்று 'மக்கள் கவிஞர்' திரு. அரு. நாகப்பன் நடுவராக இருக்கப் பட்டி மண்டபம் நடைபெற்றது.

ஃ அமரர் ஏவி. எம் நினைவாக நிறுவப்பெற்றுள்ள அறக்கட்டளையின் ஏழாம் ஆண்டுச் சொற்பொழிவு 28-7-90 & 29-7-90 ஆகிய இருநாட்கள் ஏவி எம். - இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

ஃ திருச்சி நகரத்தார் சங்கத்தின் 41ஆவது ஆண்டு விழா, பேரவைக் கூட்டம், பட்டி மன்றம் ஆகியவை 7-7-90 அன்று திருச்சியில் சங்கத் தலைவர் திரு. சுப. அருணாசலம் தலைமையில் நடைபெற்றது.

ஃ நகரத்தார் மகேஸ்வர பூஜை பரிபாலன சபையின் சார்பில் சென்னை அம்பத்தூர் டி. ஐ. சைக்கிள் தொழிற்சாலை கோயில் மண்டபத்தில் 5-8-90 ஞாயிறன்று விநாயகப் பானை வைத்தல், வேல் அபிஷேகம், தீபாராதனை, அன்னம் பாலித்தல் ஆகியவை நிகழ உள்ளன.

ஃ துலாவூர் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகர் அவர்களுக்கு புரட்டாசி மீ 19 உ (5-10-90) வெள்ளிக்கிழமை துலாவூர் ஆதீனத்தில் குருபூஜை நிகழவிருக்கிறது.

ஃ இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு வழி நடைப்பயணமாகச் சென்று திரும்பிய மதுரை நகர விடுதி மேலாளர் 'காசிஸ்ரீ' ஆர் எம். என். கோவிந்தன் செட்டியார் அவர்களுகக 15-7-90 அன்று காரைக்குடி சிவ. மெ. ஏகாதசி மடத்தில் பொன்னுடை அணிவித்துச் சிறப்புச் செய்யப் பெற்றது.

ஃ பொன். புதுப்பட்டியைச் சேர்ந்த கவிஞர் திரு. கோமகன் சென்னை வானொலியின் முதல் அலைவரிசையில் 22, 23, & 24-8-90 ஆகிய மூன்று நாட்களும் அதிகாலை 5-55 மணிக்கு ''சான்ருேர் சிந்தனை'' என்ற தலைப்பில் பேச இருக்கிருர்.

ஃ காசிக்கு வழிநடைப்பயணம் சென்று திரும்பிய குழுவினருக்கு சென்னை, இராமேஸ்வரம், திருச்செந்தூர், குன்னக்குடி, தேவகோட்டை ஆகிய இடங்களில் அமோக வரவேற்பு அளிக்கப் பெற்றது.

'காசிஸ்ரீ' கோவிந்தன் செட்டியாருடன் ஒரு நேர்முகம்

மதுரை நகர விடுதியின் மேலாளர் காரைக்குடியைச் சேர்ந்த ஆர்எம். என். கோவிந்தன் செட்டியார் அவர்கள் தமது 71 ஆவது வயதில் திருத்தொண்டர் ஆர். வயிரவன் செட்டியார் அவர்கள் தலைமையில் சென்ற குழுவினருடன் இராமேசுவரத்திலிருந்து காசிக்கு வழி நடைப் பயணமாகச் சென்று அண்மையில் நலமுடன் திரும்பியிருக்கிறார்கள்.



அந்தப் புனிதப் பயணம் பற்றி அவர்களிடம் நேர்முகம் கண்டபோது —

"காசிக்கு வழி நடைப் பயணம் சென்று வரவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எப்படி, எப்பொழுது ஏற்பட்டது?"

"புறப்படுவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பு ஏற்பட்டது. குளித்துவிட்டு வழிபாடு செய்து கொண்டிருந்தபோது 'நாமும் காசிக்குச் சென்று வந்தால் என்ன' என்ற எண்ணம் ஏற்பட்டது. பிராப்தம் இருந்ததால் நல்லபடியாகச் சென்று வர முடிந்தது."

"நீங்கள் இதற்கு முன்பு காசிக்குச் சென்றிருக்கிறீர்களா?"

"40 ஆண்டுகளுக்கு முன்பு என் தந்தையாரின் அஸ்தியைக் கரைக்க பங்காளி ஒருவருடன் காசி சென்று வந்தேன்."

"நீங்கள் சென்ற இடங்களில் மொழிப் பிரச்னை இருந்திருக்குமே...?"


"ஆமாம் ஹைதராபாத்தில் வசிக்கும் ஒருவர் - தெலுங்கு, இந்தி மொழி தெரிந்தவர் எங்களுடனே வந்ததால் மொழிப் பிரச்னையை ஓரளவு சமாளிக்க முடிந்தது."

"பயணத்தின் போது உங்களுக்கு விபத்து ஏற்பட்டதாகச் சொன்னார்களே.?"

"ஆமாம். பயணத்தின் 58 ஆவது நாள் ஆந்திராவில் தொப்புரான் என்ற இடத்தில் மலைப் பாதையில் சென்றபோது காலை 7-00 மணி அளவில் ஒரு லாரியின் கதவு என் தோள்பட்டையில் பலமாக அடித்து விட்டது. என்னுடன் வந்த அனைவரும் பயந்து விட்டார்கள். பல இலட்சம் முறை ஸ்ரீ ராமஜெயம் எழுதிய எனக்கு, 8 ஆண்டுகள் திருப்பரங்குன்றத்திற்கு வேல் எடுத்துச் சென்ற எனக்கு எந்த வலியும் இல்லை. மாறாக தோள் பட்டையில் பன்னீர் தெளித்த உணர்வு ஏற்பட்டது. ஏராளமானவர்கள் மனதால் நினைத்து வாயால் வாழ்த்தி கைகளால் ஆசீர்வதித்து அனுப்பியிருந்ததால் நான் ஆபத்தில் சிக்கியும் நலமாக வந்து சேர்ந்தேன்"

"உங்களது வழி நடைப் பயணத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நிகழ்ச்சிகள் ஏதாவது...?"

"நாங்கள் பெங்களூர் அருகே முன்னாள் பாரதக் குடியரசுத்



கண்டரமாணிக்கம் சிநா. நாச்சியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் மெய்யப்பன் B. E, D. P. H. க்கும் குருவிக்கொண்டான்பட்டி சொ. அண. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி நாச்சம்மை என்ற கீதா B. Com, க்கும் குருவிக்கொண்டான்பட்டியில் 2-7-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

தலைவர் திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அவர்களைச் சந்தித்தோம். அவர்கள் எங்களைப் பற்றிக் கேட்டார்கள். நாங்கள் "நகரத்தார், செட்டிநாடு" என்றோம். அவர் "செட்டிநாட்டு ராஜா பெரியவர். நான் இந்தியாவின் பெரிய பதவியில் இருந்தவன். இரண்டைக் காட்டிலும் நடைப் பயணம் செய்வது புனிதமானது" என்றார்கள்.

"காசியில் மித்ரா என்ற ஐ. ஏ. எஸ் அதிகாரி, வேத பாராயணம் முழங்க 41 ருத்ராட்சம் உள்ள மாலைகளை எங்களுக்கு அணிவித்து காசி விஸ்வேஸ்வரர் படம் தந்து 'காசிஸ்ரீ' பட்டம் வழங்கியபோது ஈஸ்வரனே நேரில் தோன்றி அளித்த உணர்வைப் பெற்றோம்."

— இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

சந்திப்பு : எல். சுந்தரம்

குட நீராட்டு விழா

காரைக்குடி முத்தாளம்மன் கோவில் வடபுறம் உள்ள முத்து விநாயகர் கோவில் சுமார் 50 ஆண்டுகட்கு முன்பு காரைக்குடி சேந்தணியார் வீட்டு வெ. பெரி. வெ வள்ளியம்மை ஆச்சி அவர்களால் கட்டப் பெற்றது. மேற்படி கோயில், திருப்பணி செய்யப் பெற்று, மருந்து சாத்தப் பெற்று 4-7-90 காலை குட நீராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது. டாக்டர் கே. பிச்சைக் குருக்கள் யாக சாலை, குடநீராட்டு ஏற்பாடுகளைச் சிறப்பாகக் கவனித்தார். டாக்டர் திரு. வெ. சு. அழகப்பன், திரு. ஆத. மெ. ராம. மெய்யப்பன், திரு. மெ. இராமசாமி, திரு. ராம. சுப்பிரமணியன் ஆகியோர் முன்னின்று காரியங்களைச் செய்தனர்.

உங்கள் குரல்

திரு. வி. என். சிடி. அவர்களின் இல்லத் திருமணத்திற்கு வருகை தந்த நடிகர் திலகம் திரு. சிவாஜி, திரு. வி. என். சிடி. அவர்களைப் பற்றி அவர்களின் தாயாரிடம் கூறியது. நகரத்தார்களின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

'ப்ளோரா' பழநிக்குமார்
கண்டவராயன்பட்டி

வரதட்சணைக் கட்டுப் பாடு பற்றி நம் முன்னோர்கள் கூறிய கருத்துக்களைப் பின்பற்றுவிட்டாலும் மணிவண்ணன் தம் மடலில் வரதட்சணைப் பிரச்னைக்குக் கூறியுள்ள சில ஆலோசனைகளை நம் மினத்தார் கடைப்பிடித்தால் ஏழைப் பெண்களின் திருமணங்கள் கை கூடுமல்லவா! சிந்திப்போம்; செயல்படுவோம்!

— கனகு சுப்பு
— கல்யாணி கணேசன்
நன்னிலம்

தமிழண்ணல் அவர்களுடைய கருத்தும் மணிவண்ணன் மடலை எழுதிவரும் முனைவர் சுப. அண்ணாமலை அவர்களுடைய கருத்தும் கூர்ந்து கவனிக்கத்தக்கவை. இப்போது திருமணங்களில் கழுத்து உரு தேவையில்லை. சேதாரத்தின் மதிப்பும் கூலியுமே தாங்க முடியாத அளவு இருக்கிறது. போர்க்காலத்தில் கழுத்து உருவுக்காக ரூ. 1000/- ரூ. 1500/- என்றுதான் எடுத்து வைத்தார்கள் அது வட்டியும் முதலுமாகப் பெருகி அதனைக் கொண்டு தொழில் செய்து பலர் இலட்சாதிபதியாகி இருக்கிறார்கள் என்பது கண்கூடு.

பாகனேரி அ. வ. சுப்பிரமணியன்
திருச்சி

மிருதங்கக் கல்லூர் திரு. சித. லெட்சுமணன் செட்டியார் கலைத் தந்தை ஆகியோர் பற்றிய கட்டுரைகளும் நானும் ஒரு நகரத்தார், மணிவண்ணன் மடல் ஆகிய தொடர் கட்டுரைகளும் சுவையான செய்திகளும் ஜூலை' 90 இதழுக்குப் பெருமை சேர்த்துள்ளன.

ஆர். சண்முகம்
மதுரை

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் செல்வி வயி. தேனம்மை கோயம்புத்தூர் நிர்மலா மகளிர் கல்லூரியில் B.Sc (Maths) படித்து ஏப்ரல்' 89ல் நடைபெற்ற பொதுத் தேர்வில் 500க்கு 454 மதிப்பெண்கள் பெற்று கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்றுள்ளார். அதற்காக அவரைப் பாராட்டுகிறோம்.



செல்வி தேனம்மை நாச்சியாபுரத்தைச் சேர்ந்த திரு அ. வயிரவன் என்ற திருஞானத்தின் புதல்வியாவார். வயிரவன் கோயில் பிள்ளையார் வகுப்பைச் சேர்ந்த செல்வி தேனம்மை இப்போது ஈரோடு ஆயுள் காப்பீட்டுக் கழக, வடக்குக் கிளையில் பணியாற்றி வருகிறார்.

நகரத்தார் இளைஞர்கள் உண்ணாவிரதம்!

நகரத்தார் சமூகத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரி மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் தலைவர் திரு. ஆர். சொக்கலிங்கம் தலைமையில் நகரத்தார் இளைஞர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மதுரை மத்தியப் பேருந்து நிலையம் முன்பு 27—7—90 வெள்ளிக் கிழமை காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை உண்ணாவிரதம் மேற்கொண்டனர். உண்ணாவிரதத்தை முனைவர் திரு. தமிழண்ணல் தொடங்கிவைத்தார். இளைஞர்களுக்கு ஆதரவாக 200க்கும் மேற்பட்ட நகரத்தார் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

நகரத்தார் சமூகத்தைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டிய அவசியம் பற்றியும் நகரத்தார் இளைஞர்கள் விரும்பும் கல்வியை, கல்லூரிகளில் சேர்ந்து படிக்க முடியாத அவல நிலை பற்றியும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருந்து அன்றாடம் அல்லற் படும் நகரத்தார் குடும்பங்கள் பற்றியும் நமது இதழின் ஆசிரியர் திரு வி. என். சிதம்பரம் செட்டியார், கலைமகள் திரு. இராம. நடராஜன் செட்டியார். பேராசிரியர்கள் முனைவர் திரு. தமிழண்ணல், முனைவர் திரு. சுப அண்ணாமலை. முனைவர் திரு. ந. மாணிக்கம், திரு. சொ. சொ. மீ சுந்தரம் பேராசிரியைகள் திருமதி சி. எஸ். விசாலாட்சி, திருமதி சுலோசனா சேவுகன் செட்டி, முனைவர் சரஸ்வதி இராமநாதன், திருமதி உமையாள் முத்து, திரு. எம். சின். மாணிக்கம், கவிஞர் திரு. T. குமரப்பன் திருச்சி நகரத்தார் சங்கத்தின் தலைவர் திரு. சுப. அருணாசலம் மற்றும் பல்வேறு நகரங்களை, ஊர்களைச் சேர்ந்த நகரத்தார் சங்க, இளைஞர் சங்கத் தலைவர்கள், பிரதிநிதிகள் ஊராட்சி மன்றத் தலைவர்கள், பிரதிநிதிகள் செட்டி நாட்டு ஊர்களின் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

மதுரை மாநகர் மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. சொ. காவேரிமணியம் மதுரை மாநகர் ஜனதா தளத்தின் தலைவர் திரு. ஜான்மோசஸ் ஆகியோரும் இந்த உண்ணாவிரதப் போராட்டக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினர்.

காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த உண்ணாவிரதப் போராட்டக் கூட்டத்தில் நகரத்தார்கள் தொடர்ந்து தங்களது கருத்துக்களை எடுத்துரைத்த வண்ணம் இருந்தனர்.

முன்னதாக செயலாளர் வழக்கறிஞர் திரு. பழ. இராமசாமி வரவேற்றுப் பேசினார். மாலை 5-00 மணிக்கு மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் கௌரவத்தலைவர் திரு. எம். சின். மாணிக்கம் அனைவருக்கும் குளிர் பானம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார். மற்றொரு செயலாளர் திரு ஜி. உடையப்பன் நன்றி கூறினார்.

(உண்ணாவிரதப் போராட்டத்தின் பேச்சுக்கள், படங்கள் அடுத்த இதழில் விரிவாக வெளியிடப் பெறும்.)

திருமணம்

தேவகோட்டை திரு. முல்லை முத்தையாவின் புதல்வி செல்வி கலா B. Sc B. L. I. S. க்கும் பள்ளத்தூர் திரு. நகு. சொ. சோ. சோலையப்ப செட்டியார் புதல்வன் செல்வன் சொக்கலிங்கம் B. Com. க்கும் தேவகோட்டையில் 3-6-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

ஃ ஃ ஃ

பள்ளத்தூர் திரு நகு. சொ. சோ. சோலையப்ப செட்டியார் புதல்வி செல்வி விசாலாட்சி B. Com க்கும் தேவகோட்டை திரு. முல்லை முத்தையாவின் புதல்வன் செல்வன் முல்லை பழநியப்பன் M. A. க்கும் பள்ளத்தூரில் 4-6-90 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மாறுதல் முறையில் நடைபெற்ற மேற்படி இரு திருமணங்களுக்கும் 14-6-90 அன்று சென்னையில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.



தேவகோட்டையில் 29-5-90 அன்று நடைபெற்ற சேக்கிழார் விழாவில் முனைவர் திரு. சபா. அருணாசலம் வரவேற்புரை நிகழ்த்தும் காட்சி. அருகே சிவஸ்ரீ தத்புருஷதேசிகர், விழாத்தலைவர் திரு. உ. மு. சுப. லெ. அழ. பெரிய அழகப்ப செட்டியார், முனைவர் தமிழாசுரர் திரு. சுப. அண்ணாமலை உள்ளனர்.

ஒளிப்படப் போட்டியில் பரிசு பெற்ற முத்துராமன்

வைசியா வங்கி நடத்திய வைர விழா ஒளிப்படப் போட்டியில் வேந்தன்பட்டியைச் சேர்ந்த திரு. வி. முத்துராமன் எடுத்த ஒளிப்படம் ரூ 3000/- பரிசு பெற்றது. பெங்களூரில் 7-7-90 அன்று நடைபெற்ற வைசியா வங்கி வைர விழாவில் மத்திய நிதியமைச்சர் பேராசிரியர் திரு. மது தாண்டவதேயிடமிருந்து திந. முத்துராமன் அப்பரிசினைப் பெற்றார். இப்போதும் ஏற்கனவே பலமுறையும் ஒளிப்படப் போட்டிகளில் பரிசுகள் பெற்ற திரு. வி. முத்துராமனைப் பாராட்டுகிறோம்.

திருமணம்

குருவிக்கொண்டான்பட்டி வெ. ச. திருப்பதி என்கிற வள்ளியப்ப செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி மீனாட்சிக்கும் கிழச்சிவல்பட்டி அ. சி. மு. அ. வள்ளியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் வெங்கடாசலம் M. A. க்கும் 4-7-90 அன்று குருவிக்கொண்டான் பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

தீபாவளி கங்கா ஸ்நானம் - காசி யாத்திரை

23 நாட்கள் வட இந்திய யாத்திரை

சென்னையிலிருந்து 4—10—90 ல் துவங்குகிறது

சென்னை - பண்டரிபுரம் - பம்பாய் - ஆக்ரா - மதுரா - டெல்ஹி - ஹரித்துவார் - ரிஷிகேஷ் - அலகாபாத் - காசி - கயா - கல்கத்தா - சென்னை.

ரயில் கட்டணம் (தனி காரேஜ்) பிராமணாள் சாப்பாடு, ஊர் சுற்றிப் பார்க்கும் சிலவு உள்பட கட்டணம் நபர் 1க்கு ரூ. **3500/-**

கல்கத்தா - காசி - நேபாள் - அலகாபாத் 16 நாட்கள் வட இந்திய யாத்திரை

சென்னையிலிருந்து 10—10—90 ல் துவங்குகிறது

சென்னை - கல்கத்தா - கயா - காசி - நேபாள் (காட்மாண்ட்) - அலகாபாத் - சென்னை.

ரயில் கட்டணம் (தனி காரேஜ்) பிராமணாள் சாப்பாடு. ஊர் சுற்றிப் பார்க்கும் சிலவு உள்பட கட்டணம் நபர் 1 க்கு ரூ. **2750/-**

10—10—90 முதல் 14 நாட்கள்

காசி - சாரநாத் - புத்தகயா - அலகாபாத் - நேப்பாள் (காட்மாண்ட்) - அயோத்யா.

3 டயர் ரயில் கட்டணம் (Running Train), ஊர் சுற்றிப் பார்க்கும் சிலவு, பிராமணாள் சாப்பாடு உள்பட நபர் 1க்கு கட்டணம் ரூ. **2000/-** அட்வான்ஸ் ரூ. **750/-** வீதம் அனுப்பி பதிவு செய்ய வேண்டுகிறோம்.

SUBAM TRAVEL AGENCY

சுபம் டிராவல் ஏஜன்ஸி

226, நாயக்கர் புதுத்தெரு, மதுரை-1. ☎ 22712

Prop : S. சுப்பிரமணியம்

உ

சிவமயம்

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

சொக்கநாதபுரம்

சி. அழ. சொ. காசி செட்டியார்



தோற்றம் : 23—8—1927

மறைவு : 3—8—1986

அன்பின் பிறப்பிடமாய் அறிவின் உறைவிடமாய்
பண்பின் அகமாய் பாசத்தின் நேசமாய்
உழைப்பே உயர்வாய் உண்மையே உருவாய்
ஒன்றே சொல்லாய் அதுவே செயலாய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்துள் வீற்றிருக்கும் நின் பொற்பாதங்களில்
எங்கள் கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்

இங்ஙனம்

சொ. மீனாட்சி ஆச்சி (தாயார்)

கா. தெய்வானை ஆச்சி (மனைவி)

கா. சோமசுந்தரம் B.Com. (மகன்)

வை. மீனு (மகள்)

கா. வைத்தியநாதன் B. A. (மருமகன்)

"ஸ்ரீ காசி இல்லம்" 10, திருமலை சந்து.
கோரிப்பாளையம்,
மதுரை-625 002

பாராட்டுகிறோம்

படத்தில் காணும் திரு. கே ஆர். சிதம்பரம் வடஆற்காடு மாவட்டம் ராணிப்பேட்டை D. A. V. Bhel பள்ளியில் படித்து கடந்த மார்ச்'90ல் நடைபெற்ற பிளஸ் டூ பொதுத் தேர்வில் 500க்கு 447 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.



இவரது தந்தை திரு. சி. கிருஷ்ணன் பொறியாளர். கோட்டையூரைச் சேர்ந்தவர் இவர் ராணிப்பேட்டை நாகப்பா ஸ்பிரிங்ஸ் பி. லிட். டின் இயக்குநராவார்.

திரு. கேஆர். சிதம்பரத்தின் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

கட்டுமான வளைவு, பேருந்து நிழற் கூடம் திறப்பு விழா !

குன்னக்குடியிலிருந்து துலாவூர் செல்லும் விலக்குச் சாலையில் அமைக்கப்பெற்றிருக்கும் கட்டுமான வளைவு (Arch), பேருந்து நிழற் கூடம் (Bus Shelter) ஆகியவற்றின் திறப்பு விழா 15-7-90 அன்று காலை குன்னக்குடியில் சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை 9-50 மணி அளவில் கட்டுமான வளைவை வேந்தன்பட்டியைச் சேர்ந்த திருமதி மீனாட்சி இயற்பகை திறந்து வைத்தார்.

பேருந்து நிழற் கூடத்தை மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. எம். ராஜகுமார் திறந்து வைத்தார்.

முன்னதாக திரு. சம்பந்த மூர்த்தி ஓதுவார் இறைவணக்கம் பாடினார். 'காசிஸ்ரீ' திரு அரு. சோமசுந்தரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவிற்குத் தமிழ் மாமுனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையேற்றார்கள்.

இவ்விழாவில் - இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு வழி நடைப் பயணம் சென்று திரும்பிய அடியார்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப் பெற்றது. தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்புச் செய்தார்கள்.

பின்னர் விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், முனைவர் திரு. தமிழண்ணல், முனைவர் திரு. ச. மெய்யப்பன் திரு. அள. அரு. சோம. நாராயணன் செட்டியார், இரசிகமணி திரு. இராம. சிதம்பரம் செட்டியார், திரு. நாக. ராம. இராமசாமி செட்டியார், திரு. ராஜ்குமார், திரு. கரு. முத்தழகன் தவத்திரு பாதரக்குடி சுவாமிகள் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.

இவ்விழாவில் கோவிலூர் ஆதீனம் தவத்திரு காசிவிசுவநாத சுவாமிகளும் துலாவூர் ஆதீனம் தவத்திரு ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளும் கலந்து கொண்டனர்.

நாதசுர இசையில் மயங்கிய சிவாஜி!

திரு. வி. என். சிடி. அவர்களது புதல்வன் செல்வன் நாகப்பன் - செல்வி கீதா திருமணத்திற்கு 5—5—90 அன்று இராங்கியம் வந்த 'நடிகர் திலகம்' திரு. சிவாஜி கணேசன், உணவு உண்ண வந்தபோது வீட்டின் முகப்பில் அந்நேரம் வேறு ஒரு பாடலை இசைத்துக் கொண்டிருந்த குருவிக்கொண்டான் பட்டியைச் சேர்ந்த நாதசுரக் கலைஞர் திரு. முத்துவேலும் அவர்தம் குழுவினரும் சிவாஜியின் வருகையைப் பார்த்துவிட்டு சட்டென்று 'நலந்தானு' என்ற பாடலை இசைக்கத் தொடங்கினர். ''தில்லானு மோகனும்பாள்'' படத்தில் தான் நடித்த காட்சியை நினைத்து மகிழ்ந்த அவர், அந்த இசையில் மயங்கிய வாறு அப்படியே நின்று விட்டார். பாட்டு முடிந்ததும் கலைஞர் களைப் பாராட்டி ஆசீர்வதித்ததுடன் அவர்களோடு சேர்ந்து ஒளிப்படமும் எடுத்துக் கொண்டார்.

கட்டுமான வளைவையும் பேருந்து நிழற்கூடத்தையும் அமைக்க முழு முயற்சி எடுத்துக் கொண்டு சிறப்பாகச் செயலாற்றிய தேனிபட்டி திரு. இராம. ஏசப்பன், கண்டவராயன்பட்டி திரு. ஏஎல் எஸ். அழகப்பன் ஆகிய இருவரையும் இவ்விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பாராட்டி பொன்னுடை அணிவித்ததுடன் அவர்களுக்குத் 'திருவருட் செல்வர்' என்ற பட்டமும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

விழாவின் இறுதியில் திரு. இராம. ஏகப்பனும் திரு. ஏஎல். எஸ். அழகப்பனும் ஏற்புரை நல்கினர்.

அழுதால் கிடைக்கும்

அழுகையில் தமிழ் அழுகை, இந்தி அழுகை, ஆங்கில அழுகை, தெலுங்கு அழுகை என்று மொழிப் பிரச்னை கிடையாது. சிலர் கண்ணீர் விட்டும், சிலர் தேம்பியும் அழுகின்றனர். குழந்தை பிறந்ததும் பாலுக்கு அழுகிறது. தாயார் பால் கொடுக்கிருள். ஐந்து வயதுக் குழந்தை, மிட்டாய், புத்தகம், விளையாட்டுப் பொருள் கேட்டு அழுகிறது பெற்ருேர் குழந்தையின் ஆவலை நிறைவு செய்கின்றனர்.

இதே போல் பலர் அழுகையின் மூலம் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்கின்றனர். அப்படியிருக்க ஆண்டவனிடம் அழுது மனம் உருகி அவன் வயப்பட்டால் நாம் விரும்புவதை, அவன் கொடுக்காமல் போவானு?

(திருமுருக கிருபானந்த வாரியார் ஆற்றிய உரையிலிருந்து)

— மேலச்சிவபுரி முத்துராமன் திருச்சூர்

ஆவணிக் கார்த்திகைக்கு காவடி, பால் குடம்

ஆவணிக் கார்த்திகையை முன்னிட்டு பிரமோதூத ஞு ஆடி மீ 23 உ (8-8-90) புதன் கிழமை மாலை 6 மணிக்கு மதுரை நகர விடுதியில் நகரத்தார் பொதக் காவடிக்குச் சீட்டுக் குலுக்கப் பெறுமென்றும் ஆவணி மீ 24 உ 9-9-90 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நகர விடுதியில் காவடி கட்டி பொங்கல் வைத்து வேல் அபிஷேகம் செய்து அரோஹராச் செய்யப்படுமென்றும் மறுநாள் 10-9 90 திங்கட்கிழமை காலை 5-30 மணிக்கு நகர விடுதியில் பால் குடங்கள் கட்டி 7-35 மணிக்குத் திருப்பரங்குன்றம் புறப்பட்டு அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்குக் காவடி செலுத்தப் பெறுமென்றும் மதுரை நகரத்தார் சங்கத்தின் செயலாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அரியக்குடியில் வழக்காடு மன்றம்

அரியக்குடி திருவேங்கடமுடையான் கோவில் திருவிழாவை முன்னிட்டு, தங்கபஸ்பம் அதிபர் திரு. மாரிமுத்துப்பிள்ளை மண்டகப் படியாகப் புஷ்பப் பல்லக்குத் திருவீதி உலாக்காட்சி நடந்தது. அதனையொட்டி 12-6-90 அன்று 'மக்கள் கவிஞர்' அரு. நாகப்பன் தலைமையில் வழக்காடு மன்றம் நடந்தது. நிர்வாக அதிகாரி திரு. பாண்டியன் வரவேற்றார். ''பாரதப் போக்கிலும், பாரதி நோக்கிலும் தருமன் குற்றவாளி'' என்று செந்தமிழ்ச் செல்வி சு. சரசுவதி வழக்குத் தொடுக்க கவிஞர் கஸ்தூரி நாதன் எதிர் வழக்காடினார். முதல் தீர்த்தம் ஜெகநாத ஆச்சாரியார் வாழ்த்துரை வழங்கினார்.

நடுவர் திரு. அரு. நாகப்பன் தனது தீர்ப்பில் ''தருமன் குற்றவாளி இல்லை'' என்று கூறினார். திரு. சேதுராமன் நன்றி கூறினார்.

அரு. லெட்சுமணன் நீதிபதியானார்

தேவகோட்டையைச் சேர்ந்த திரு. அரு. லெட்சுமணன் சென்னை உயர் நீதி மன்றத்தின் நீதிபதியாக 11-6-90 அன்று தமிழக அரசால் நியமிக்கப் பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.


சென்னை உயர் நீதி மன்றத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக வழக்கறிஞராகப் பணியாற்றிய இவர் மார்ச்' 89ல் அங்கு அரசு வழக்கறிஞராக நியமிக்கப் பெற்றுப் பணியாற்றினார்.

சென்னை உயர் நீதி மன்ற நீதிபதிகளிலேயே வயதில் மிகவும் இளையவரான (வயது 48) இவர் பி. ஏ. பி. எல். படித்தவர். பல வங்கிகளுக்குச் சட்ட ஆலோசகராகப் பணியாற்றியவர். அவருக்கு நமது நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எகஸ்போ பிரிண்டாஸ் 20, கிருஷ்ணபுரம 4-வது குறுக்குத தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்



மதுரைப் பெருநகர் காவல்துறை முதல் ஆணையாளர் திரு. கோ. செல்வராஜ் I. P. S. அவர்களுக்கு மதுரையில் 8—7—90 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் நினைவுப் பரிசு வழங்கும் காட்சி. அருகே - இடதுபுறம் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் வலதுபுறம் திரு. எஸ். பாபு I. R. S. (வருமான வரி ஆணையாளர்)



மேற்படி பாராட்டு விழாவில் விழாக் குழு சார்பாக செயலாளர் திரு. எம். சின். மாணிக்கம் திரு. செல்வராஜ் அவர்களுக்கு வாழ்த்து மடல் வழங்கும் காட்சி.